**மஹியங்கன பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹியங்கன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொருட்கள் மெய்மையாய்வு சபையினால் குறைப்பொருட்களாக இனங் காணப்பட்டிருந்த ரூபா 51,495 பெறுமதியான 79 பொருளிருப்பு பொருட்கள் நிலையான சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு திருத்தப்பட வேண்டும். | பற்றாக்குறையான பொருட்கள் எதிர்வரும் ஆண்டில் பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

#### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 8,932,742 பெறுமதியான 02 சொத்து விடயங்கள் உறுதிகள், திட்டவரைபடங்கள் மற்றம் கட்டளைகள் முறையான மதிப்பீட்டு அறிக்கை இருப்பு மெய்மையாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதிப் படுத்தப்பட முடியாதிருந்தது. | கணக்காய்விற்கான சான்றுகள் கணக்குகளுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணியின் உரித்தினை கையேற்பதற்காக உரிய நிறுவனங்களுக்கு வேண்டு கோள் விடுக்கப்பட்டிருந்த போதும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 49 (ஆ) பிரிவுகள் | 08 அத்துமீரிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) | 127 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான 48 மயானங்கள் அளவிடப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக் கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | 11 மயானங்களின் அளவீடுகளுக்கு தொடர்புபடுத்தப் பட்டுள்ளதுடன் எஞ்சிய நிதிஏற்பாடுகளிலிருந்து ஏனைய மயானங்களின் அளவீட்டு நடடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | 134(6) ஆம் பிரிவு | ரூபா 687,634 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தில் ஒரு பகுதி அறவிடப் பட்டுள்ளதுடன் நிலுவைத் தொகையை செலுத்தாத நபர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். |
| (iv) | 159(1)ஆம் பிரிவு | அறவிட வேண்டிய சகல வருமானஙகளும் சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 179 | 2002 முதல் 2018 ஆம் ஆண்டு வரை வாரச்சந்தை நடாத்திச் சென்றமைக்காக வெளித்தரப்பினருடன் குத்தகை உடன்படிக்கை யொன்று மேற்கொள்ளப்படாம | சட்டரீதியான உடன்படிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | வாரச்சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கு மஹியங்கன விஹாராதிபதி அவர்களின் எதிர்ப்பு காணப்படுவதால் உடன்படிக்கை கைச்சாத்திட விருப்பம் தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | | ல் ரூபா 660,000 குத்தகை தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,935,268 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,062,705 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,531,235 | 3,031,235 | 2,343,601 | 687,634 | 5,231,235 | 3,031,235 | 4,871,026 | (1,839,791) |
| (ii) | வாடகை | 14,846,550 | 1,734,,550 | 13,342,150 | 392,400 | 14,235,562 | 2,228,450 | 13,885,103 | 11,656,653 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,501,000 | 1,501,000 | 2,151,689 | (650,689) | 1,103,000 | 1,103,000 | 2,160,910 | (1,057,910) |
| (iv) | ஏனைய வருமானம் | 17,293,010 | 17,293,010 | 11,022,845 | 6,270,165 | 21,409,500 | 5,399,332 | 1,972,776 | (6,573,444) |
| | மொத்தம் | 39,171,795 | 35,559,795 | 28,860,285 | 6,699,510 | 41,979,297 | 11,762,017 | 32,889,815 | 2,185,508 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் பெறவேண்டிய ரூபா 21,283,142 ஆன கணக்கு மீதிகளை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 மே 27 மற்றும் 28 ஆந் திகதிகளில் ஆதனங்கள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் ஆதனங்களைத் |

| | | |
|---|---|---|
| | | தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் நிலுவை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 26,226,713 மீளாய்வாண்டிலும் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். | நானாவித கடன்கொடுத்தோர் தீர்வு செய்யப்பட்டுள்ளதுடன் பொது வைப்புக்கள் வேண்டுகோளின் பேரில் விடுவிக்கப்பட்டன. |

### 2.2.3 <u>நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) <u>நீதிமன்றத் தண்டப்பணம்</u><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,184,307 ஆக இருந்தது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | அட்டவணைகள் மாகாண இற வரித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. |
| (ஆ) <u>முத்திரைக் கட்டணம்</u><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,000,000 ஆக இருந்தது | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ஓராண்டிற்கு மேற்பட்ட இருந்து வரும் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் ரூபா 15,377,279 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>செயலாற்றல்</u>

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) <u>உப விதிகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 24 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிறப்பிக்கப் பட்டிருந்தன. | உப விதிகள் பிறப்பிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சபை தீர்மானமொன்று எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) <u>திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மஹியங்கன தேசிய பாடசாலைக்கு அண்மித்ததாக மஹவலி கங்கை மற்றம் பொது மயானம் என்பவற்றிற்கு அருகில் திறந்த வெளியில் கழிவுகள் மற்றும் மலக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. | திண்மக் கழிவுகளை வெளியேற்று வதற்கு முறையாக செயற்பட வேண்டும். | கொம்போஸ்ட் செயற்திடத்தை சுற்றி யானை வேலி அமைப்பதற்கு கிராம வாசிகளின் எதிர்ப்பு காணப்படுகின்றது. கழிவுப் பொருள் நிலையமொன்ற நிர்மாணிக்கப்பட்டு முறையாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் . |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங் கண்டு, அவற்றை அளப்பதற்கான சுட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 4,106,149 செலவிடப்பட்டு சதுப்பு நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வாரச்சந்தைக் கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வில்லை கொள்ளப்படும் போது ரூபா 32,670 பெறுமதியான தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் மாநாட்டு மண்டபமொன்றாக பயன்படுத்த தீர்மானிக் கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிற்காக சொரபொரவெவ குளத்திற்கு அண்மையில் வாகன நிறுத்தமிட குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கையின் போது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் இரண்டாம் கேள்விதாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடாமை காரணமாக ரூபா 407,989 ஆன வருமானமொன்று அறவிடப்பட்டி ருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | சொரபொரவெவ குளம் புனரமைப்புச் செய்யப்படுவதால் வருமானம் குறை வடைந்துள்ளதாக குத்தகையாளர் அறிவித்திருந்ததுடன் சபை அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (இ) | 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 6.∵2006 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் சம்பள மாற்றத்தின் போது உத்தியோகத்த ரொருவருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 95,134 ஆன சம்பளம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கூடுலாக கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம் அறவிடப்பட வேண்டும். | அறவிடவுள்ள ரூபா 93,134 ஆன கடன் தொகையை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந் து அறவிடுவதற்கு 2018.10.16 ஆந் திகதி மஹியங்கன ஆதார வைத்தியசாலைக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி மன்றங்களில் முன்னரங்கு அலுவலகங்கள் நிர்மாணிக்கையில் ரூபா 1,585,488 செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டு அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் தேவையான மென் பொருட்களை வழங்காமையால் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. | மென் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். | மாகாண சபைகள் அமைச்சின் மூலம் வழங்கப்பட்டதன் பின்னர் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.3 <u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மஹியங்கன நகர மத்தியில் அமைந்துள்ள விடுமுறைக் கேந்திரத்தின் 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரை05 ஆண்டு காலப்பகுதியில் ரூபா 5,734,392 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | நட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். வேண்டும். | எதிர்காலத்தில் இவ்விடத்தில் நகர மண்டபமொன்று, கடைத் தொகுதியொன்று மற்றும் விடுமுறை கேந்திரம் நிர்மாணிக்கப்படும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிற்காக திட்ட வட்டமான இடமொன்று இனங் காணப்படாமல் கடல் மீன் விற்பனை உரித்தினை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு 159,300 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்தது. | நட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். வேண்டும். | குத்தகை கொடுப்பனவு செய்பவர் தெரியப் படுத்தப்பட்டுள்ளதுடன் நிலுவை பணத்தை செலுத்தாவிட்டால் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் முறையாக குத்தகைக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.4 மனித வள மேலாண்மை

| தணிக்கை கண்காணிப்பு | பரிந்துரை | கணக்கியல் அதிகாரியின் கருத்துகள் |
| --- | --- | --- |
| செய்யப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி நான்கு பதவிகளுக்கு தொடர்புடைய ஊழியர்கள் பத்து பதவிகள் . ஆனால் அதிகமான ஊழியர்கள் ஒப்புதல் பெறவில்லை. | பதவிகளை ஒப்புதல் அளிக்க வேண்டும் | ஒரு பதவிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மற்ற பதவிகளுக்கு ஒப்புதல் பெற மேலாண்மை சேவை துறையிலிருந்து கோரப்பட்டது. |
| அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் 12 வெற்றிடங்களை 07 பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை | வேலை வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். | உள்ளூர் அரசு ஆணையம் மூலம் மேலாண்மை சேவை ஆணையத்திற்கு தகவல் கொடுத்திருந்தது. |

**3.5** **<u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>**
**<u>விளைவற்ற சொத்துக்கள்</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 மே 18 ஆந் திகதி ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் அலுவல்கள், சுற்றுலா அமைச்சினால் இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட சொரபொவ குளத்திற்கு அருகாமையிலான ஆரோக்கிய வசதிகள் செயற்திட்டம் இரண்டரை வருடகாலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | குத்தகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட வேண்டும் | 2019 இல் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது |
| (ஆ) | 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் 02 உழவு இயந்திரங்கள், முச்சகர வண்டியொன்று விளைவற்ற வகையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 உழவு இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் முச்சக்கர வண்டியை ஏல விற்பனை செய்வதற்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 16,203,454 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி பிரிவிற்கான கட்டிடம் விளைவற்று காணப்பட்டது. | சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டும் | சேதனப் பசளை உற்பத்தி எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7,206,262 ஆன செலவினமொன்று நிர்மாணிக்கப்பட்ட தகணமண்டபம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தகண மண்டபம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும் | தேவையான தொழிலாளர்களை சேர்த்து உபகரணங்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். |

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் டீஎம்ஏ.2009(01) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காலாண்டிற்கும் ஒரு தடவை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |